


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், பறக்கையில் உள்ள மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு இன்று (09.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மீன்வள ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் முனைவர் சா. டேவிட் கிங்ஸ்டன் உடனுள்ளார்.

செ.ெ வ.எண்: 615/2016 நாள்: 09.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கால்நடை பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு இன்று (09.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய் வராமல் தடுக்க, தனுவாசு குருணை வடிவ தடுப்பு மருந்தினை வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பறக்கையில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பயிற்சி மையத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மையம் 1981-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு விவசாயிகளுக்கும், துறை அலுவலர்களுக்கும் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. பால்மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு ஆகியவற்றில் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. விவசாயிகள் கல்வி சுற்றுலாக்களும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அசோலா உற்பத்தி, பால்மாடு வளர்ப்பு, கோழிகளில் நோய் தடுப்பு மருந்து செயல்படும் திறன் ஆகியவை தொடர்பான ஆராய்ச்சிகளும் 2015-16-ம் ஆண்டு இம்மையத்தில் நடைபெற்றுள்ளது.

ஆடு வளர்ப்பு, பால்மாடுகள் வளர்ப்பு, பசுந்தீவனம் உற்பத்தி, நாட்டுக்கோழி வளர்ப்பு ஆகியவற்றிலும் பால் மற்றும் இறைச்சிகளில் இருந்து மதிப்பு கூட்டிய பொருட்கள் தயாரித்தல் தொடர்பாகவும் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. திருவட்டார் வட்டாரத்தில் கடக்கநாத் மற்றும் கிராமஸ்ரீ ரக கோழி வகைகள் முட்டை, இறைச்சி உற்பத்திக்கு அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தோவாளை வட்டாரத்தின் அனந்தபுரம் கிராமம் கால்நடை பராமரிப்பு தொடர்பான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு இந்த மையத்தால் தத்தெடுக்கப்பட்டுள்ளது.

கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளை கழிச்சல் நோயை தடுப்பதற்காக தனுவாசு குருணை வடிவ தடுப்பு மருந்து இன்று கோழிகளுக்கு வழங்கப்பட்டது. கடந்த 3 மாதங்களாக 6,000 கோழிகளுக்கு இந்த தனுவாசு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், கால்நடை பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் முனைவர் த. ரவிமுருகன், பேராசிரியர் முனைவர் மு. மதன்மோகன் ஆகியோர் உடனுள்ளனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.